# இறுதி அஞ்சலி

# தோழர் V. A. கந்தசாமி

நவாலி தெற்கு, மானிப்பாய்



**தோற்றம் :**
***04-12-1924***

**மறைவு :**
***09-11-1992***

வட இலங்கையில் மானிப்பாயில் நவாலி என்ற கிராமத்தில் சாதாரண குடும்பமொன்றில் பிறந்த தோழர் **V. A. கந்தசாமி** இலங்கையின் அரசியல் வரலாற்றில் அழிக்க முடியாத இடம் பெற்றுவிட்டவர்.

சாதாரண கூலித் தொழிலாளியான அவர், அரசியல் வாழ்வில் புகுந்து குடும்ப வாழ்வை தியாகம் செய்தவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச செயலாளராகவும், மத்திய கமிட்டி உறுப்பினராக வும், அரசியல் குழு உறுப்பினராகவும், அரசியல் பணியாற்றிய அவர் தொழிற்சங்க போராட்டங்களின் மூலம் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்தவர். அன்றைய யாழ்ப்பாண சமூகத்தின் சாதிவெறிக்கெதிரான போராட்டங்களை தலைமை தாங்கி, வழி நடத்திச் சென்று சாதனைகள் படைத்தவர்.

இலங்கை கம்யூனிச கட்சியில் பணிபுரிந்த காலத்தில் சீனா, ரஷியா, அல்போனியா போன்ற சோஷலிச நாடுகளிற்கு சென்று அந்நாட்டு உயர்மட்ட தலைவர்களுடன் உழைக்கும் மக்களின் விடுதலை பற்றியும் சோஷலிச நிர்மானம் குறித்தும் விவாதங்களில் கலந்து கொண்டவர்.

ஈழக் கோரிக்கை ஆயுதப் போராட்டம் என பரிணமித்த வேளையில் மாக்சிசலெனினிசத்தை தனது தத்துவமாக உயர்த்திப் பிடித்து, ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் விடுதலையை நேசித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை அடையாளம் கண்டு, இணைந்து நின்று, ஆசானாய், வழிகாட்டியாய், ஊறியனாய், தனது அனுபவத்தை, ஆற்றலை வெளிப்படுத்தி அயராது உழைத்தவர். குறுகிய காலத்திலேயே தோழர்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றுக் கொண்டவர்.

மாக்சிச லெனினிசத்தின் பால் உறுதியான பற்றும், கம்யூனிச சமூகத்தின் மேல் தளராத நம்பிக்கை யும் கொண்டு வாழ்ந்த தோழர் **V. A. கந்தசாமி** தன் வாழ்நாளில் கம்யூனிச பண்புகளையும், நெறிமுறை களையும் வழுவாது பின்பற்றியவர். எமது அரசியல் வாழ்விற்கு முன்னுதாரண புருஷர். அவர் நம்மோடு வாழ்ந்தார் என்பதையிட்டு நாம் பெருமை கொள்வோம்.

அவர் இறுதிவரை எந்த இலட்சியத்திற்காக வாழ்ந்து மடிந்தாரோ அந்த இலட்சியங்கள் வெற்றிபெற அயராது உழைப்போம். அதுவே நாம் அவருக்கு செய்யும் அஞ்சலி.

—தோழர்கள்